2. தெசலோனிக்கேயர்

மக்கெதோனியாபகுதிபிலிப்பி,தெசலோனிக்கேயாபட்டணங்களைஉள்ளடக்கியதாகும்.தெசலோனிக்கேயா, துறைமுகமும், வியாபார மைய ஸ்தலமுமாயிருந்தது. பவுல் வாழ்ந்த காலத்தில் இங்கு சுமார் 200,000 மக்கள் வாழ்ந்திருப்பார்கள்.

வரலாற்றுப் பின்னணி

எருசலேமில் ஆலோசனைச் சங்கம் கூடிய சில காலத்திற்குப் பின்னர் பவுல் சீலாவைத் தெரிந்து கொண்டு தனது இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தை மேற்கொண்டார் (அப்போஸ்தலர் 15:36,40). தீமோத்தேயு லீஸ்திராவில் இவர்களுடன் சேர்ந்து கொண்டார் (அப்போஸ்தலர் 16:1-3). லூக்கா துரோவாவிலிருந்து பிலிப்பி வரைக்கும் இவர்களுடன் பிரயாணஞ் செய்து, அங்கேயே தங்கி விட்டார் (அப்போஸ்தலர் 16:10-40).

பவுல் பிலிப்பி ஊழியத்திற்குப் பிறகு தெசலோனிக்கேயாவுக்குச் சென்றார். இங்கு அவர் குணப்பட்டவர்கள் அநேகரை ஆதாயப்படுத்திக் கொண்டார். இவர்களில் சிலர் யூதர்களும், அநேகர் கனம்பெற்ற ஸ்திரீகளும், மற்றும் திரளானோர் புறஜாதிகளுமாயிருந்தார்கள். பவுல் இரவோடிரவாகத் தெசலோனிக்கேயாவை விட்டுப் புறப்பட வேண்டியதாயிருந்தது. அவர் பெரோயாவில் சில காலம் தங்கியிருந்து விட்டு, கடைசியாக அத்தேனே பட்டணம் சென்றார் (அப் 17:10-15). தீமோத்தேயு பெரோயாவில் தங்கிவிட்டார். சில காலத்திற்குப் பிறகு இவர் அத்தேனேயில் பவுலைச் சேர்ந்து கொண்டார். தெசலோனிக்கேயாவிலுள்ள சபையைச் சந்திக்கும்படிக்கு பவுல் தீமோத்தேயுவை அனுப்பினார் (1தெசலோனிக்யேர் 3:1-5). பவுல் அத்தேனே பட்டணத்தை விட்டு, தொடர்ந்து கொரிந்துவுக்குச் சென்றார். இங்கு அவர் ஒரு வருஷமும், ஆறு மாதமும் ஊழியஞ் செய்தார் (அப் 18:11).

பவுல் கொரிந்துவில் இருந்தபொழுது தீமோத்தேயு தெசலோனிக்கேயா சபையிலிருந்து நற்செய்தி கொண்டு வந்தார் (1தெசலோனிக்கேயர் 3:6). தீமோத்தேயுவின் அறிக்கையின் முகாந்தரம் பவுல் 1 தெசலோனிக்கேயர் நிருபத்தை எழுதினார். இதற்குப் பின்னர் தெசலோனிக்கேயாவிலிருந்து பவுலுக்குக் கூடுதல் தகவல் கிடைத்தது போலிருக்கிறது. இதன் விளைவாகவே, அவர் 2தெசலோனிக்கேயர் நிருபத்தை எழுதினார் (2 தெசலோனிக்கேயர் 2:2; 3:11).

பொருளடக்கமும், அதன் சுருக்கமும்

தெசலோனிக்கேயர்கள் அஞ்ஞானத்திலும், துன்மார்க்கத்திலுமிருந்து அப்பொழுதுதான் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் உபத்திரவங்களுக் கூடாக சென்று கொண்டிருந்தார்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்தும் அவர்கள் குழப்பமடைந்திருந்தார்கள். ஆதலால், அவர்களுக்கு எழுதின தனது நிருபங்களில் இந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் அளித்தார். இரண்டு நிருபங்களும் ஒரே விதமான மையப்பொருளைக் கொண்டுள்ளது. இருப்பினும், விஷயங்களில் வித்தியாசங்கள் உள்ளன.

அ. தெசலோனிக்கேயருடன் தனக்கிருந்த உறவைப் பற்றிய விரிவான விவரத்தைப் பவுல் முதலாம் நிருபத்தில் நமக்களிக்கிறார். இந்த உறவைப் பற்றிய எந்தக் குறிப்பும் இரண்டாம் நிருபத்தில் இடம்பெறவில்லை

ஆ. ஏற்கெனவே கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்பதை முதலாம் நிருபம் விளக்குகிறது. கர்த்தரின் நாள் வருவதற்கு முன் வெளிப்படவிருக்கிற “அக்கிரமக்காரன்” பற்றி இரண்டாம் நிருபத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

2. தெசலோனிக்கேயர்

1 தெசலோனிக்கேயரில் பவுல் இரண்டு கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறார்: இயேசுவின் வருகைக்கு முன்னர் கிறிஸ்துவுக்குள் மரித்த விசுவாசிகளுக்கு என்ன சம்பவிக்கும்? *(4:13-18)*. கிறிஸ்து எப்போது மீண்டும் வருவார்? *(5:1-11)*.

2 தெசலோனிக்கேயரில் பவுல் பதிலளிக்கும் கேள்விகளாவன: கிறிஸ்துவின் வருகைக்கு முன்னர் நிகழவிருக்கும் சம்பவங்கள் என்னென்ன? பவுல் மூன்று காரியங்களைச் சுருக்கி வரைகிறார்: தேவனுக்கு விரோதமாகப் பெரும் துரோகம் நேரிடும் *(2:3)*, அக்கிரமத்தின் வல்லமையைத் தடைசெய்கிறவர் நீக்கப்படுவார் *(2:6,7)*, அக்கிரமக்காரன் தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிப்பான் *(2:4,9)*.

இ. முதலாம் நிருபத்தில், வேலையில்லாமல் சோம்பலாய் இருப்பவர்களைப் பவுல் எச்சரித்தார்; இரண்டாம் நிருபத்தில், வீண் அலுவல்காரரை எச்சரிப்பதுடன், அவர்களுக்கு வெட்கமுண்டாகும்படிக்கு அவர்களுடன் கலவாதிருக்கும்படி அவர் எழுதுகிறார்.

ஈ. முதலாம் நிருபத்தில் மோக இச்சைக்குட்பட்டவர்களை எச்சரிக்கிறார்; இரண்டாம் நிருபத்தில், விசுவாசத்தில் உறுதியாக நிற்கும்படிக்கு விசுவாசிகளை ஊக்குவிக்கிறார்.

கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றி தவறான எண்ணங்கொண்டவர்களுக்கும், விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினவர்களுக்கும் தேவையாயிருந்த போதனையை இவ்விருநிருபங்களும் விளக்குகின்றன.

1தெசலோனிக்கேயர்: கிறிஸ்துவின் வருகையின் நம்பிக்கை

1. வாழ்த்தும், நன்றி நவிலலும் *(1:1-10)*.
2. பவுலின் ஊழியத்தின் ஆய்வு *(2:1-16)*
3. தெசலோனிக்கேயரைச் சந்திக்கும்படியான பவுலின் வாஞ்சை *(2:17-3:5)*.
4. தீமோத்தேயுவின் அறிக்கை *(3:6-13)*.
5. கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றிய புத்திமதி *(4:1-12)*.
6. கர்த்தரின் இரண்டாம் வருகையைப் பற்றிய சத்தியங்கள் *(4:13-5:11)*.
7. இறுதி புத்திமதி *(5:12-28)*.

2தெசலோனிக்கேயர்: கிறிஸ்துவின் வருகையின் ஜெயம்

1. நன்றி நவிலலும், வேண்டுதலும் *(1:1-12)*.
2. கர்த்தரின் நாளைச் சூழ்ந்துள்ள சம்பவங்கள் *(2:1-12)*.
3. கர்த்தருக்குள் ஸ்திரமாயிருக்கும்படியான புத்திமதி *(2:13-17)*.
4. வேண்டுதலும் கட்டளையும் *(3:1-15)*
5. முடிவுக் குறிப்புகள் *(3:16-18)*.

முக்கியத் தகவலின் மறுபார்வை

1. பவுலின் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில், எருசலேம் ஆலோசனைச் சங்கத்திற்குப் பிறகு 1,2 தெசலோனிக்கேயர் நிருபங்கள் எழுதப்பட்டன.

2. தெசலோனிக்கேயர்

2. தெசலோனிக்கேயருடன், பவுலுக்கிருந்த உறவின் விரிவான விபரம்; ஏற்கெனவே கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்பதின் விளக்கம்; சோம்பலும், மோக இச்சையும் உள்ளவர்களுக்கான எச்சரிப்பு ஆகியவை 1 தெசலோனிக்கேயரில் இடம் பெற்றுள்ளன.

3. தெசலோனிக்கேயருடன் பவுலுக்கிருந்த உறவின் சிறு குறிப்புகள், கர்த்தரின் நாளுக்கு முன் வெளிப்படவிருக்கும் "அக்கிரமக்காரனின்" விளக்கம்; சோம்பலுள்ளவர்களுக்கும், சோம்பலுள்ளவர்களுடன் சேர்ந்திருப்பவர்களுக்குமான எச்சரிப்பு; விசுவாசத்தில் உறுதியாக நிற்கும்படிக்கு ஊக்கமளித்தல் ஆகியவை 2தெசலோனிக்கேயரில் இடம் பெற்றுள்ளன.

4. கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றிக் குழப்பமடைந்திருந்த விசுவாசக் கூட்டத்தாருக்கும், அப்பொழுதுதான் விக்கிரகங்களை விட்டு மனந்திரும்பினவர்களுக்கும் தேவையாயிருந்த போதனை இவ்விரு நிருபங்களிலும் இடம் பெற்றுள்ளன.

கர்த்தருடைய நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (2 தெசலோனிக்கேயர் 2:1-12)

முன்னுரை

அ. பவுலும், அவரோடிருந்தவர்களும் தெசலோனிக்கேயில் நிறுவிய சுவிசேஷ ஊழியத்தின் சபையிலுள்ள விசுவாசிகளால் கேட்கப்பட்டக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் இரண்டு தெசலோனிக்கேயரின் இந்தப் பகுதியை அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார்:

1. கர்த்தருடைய நாள் ஏற்கெனவே வந்துவிட்டதா?

2. கர்த்தருடைய நாளில் நாம் கைவிடப்பட்டோமா?

3. காரணமேதுமின்றி துன்பத்தையும், உபத்திரவத்தையும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோமா?

ஆ. நாம் காண்கிறபடி, இது இவ்விதமில்லை என்பதைப் பவுல் தெளிவுபடுத்துகிறார்: "இல்லை, கர்த்தருடைய நாள் இன்னமும் வரவில்லை, உங்களுடைய மகிமையின் நம்பிக்கையை நீங்கள் கைவிடவில்லை. உங்களுடைய துன்பமும், உபத்திரவமும் விருதாவாயிருக்கவும் இல்லை. ஆதலால், பிறரால் மிக எளிதாக வஞ்சிக்கப்பட இடங்கொடாதிருங்கள்! பீதியடையாதிருங்கள், சஞ்சலமடையாதிருங்கள், நீங்கள் பெற்றிருக்கும் தவறான செய்திகளினால் கலக்கமும் அடையாதிருங்கள்!

இ. இவைகள் சம்பவிக்கும் முன் கர்த்தருடைய நாள் வராது:

1. விசுவாச துரோகம் முந்தி நேரிடும்

2. "கேட்டின் மகன்" வெளிப்படுவான்.

3. அக்கிரமத்தின் வல்லமையைத் தடைசெய்கிறவர் நடுவிலிருந்து நீக்கப்படுவார்.

1. கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச்சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும், கலங்காமலும் இருங்கள் (2:1,2).

அ. வசனம் 1. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங் குறித்து". தமது சபைக்காக ஆகாயத்தில் கர்த்தர் வருவதும், பரிசுத்தவான்கள் அவரிடத்தில் சேர்க்கப்படுவதும், சபை எடுத்துக்கொள்ளப்படும் ஒரு சம்பவத்தின் இரு பகுதிகளாகும். இக்ஷணத்தில் பரிசுத்தவான்கள்:

1. ஒருவரையொருவர் சந்திப்பார்கள்

2. கர்த்தரை சந்திப்பார்கள்

3. எப்பொழுதும் கர்த்தருடனும், பரிசுத்தவான்களுடனும் கூட இருப்பார்கள். (1தெசலோனிக்கேயர் 2:19; 4:17).

ஆ. வசனம் 2 "சகோதரரே,... சஞ்சலப்படாமலும், கலங்காமலும் இருங்கள்" "சஞ்சலப்படுதல்" என்பதின் அர்த்தம், பெருங்காற்றினாலும், அலைகளினாலும் கப்பல் அலைசடிப்படு வதைப் போன்று நிலைகுலைந்து போதல், உங்கள் எண்ணத்தில் சமநிலையை இழத்தல் என்பனவாகும். "கலங்குதல்" என்பதின் அர்த்தம் கிலிபிடைதல் என்பதாகும். தொடர்ந்து கவலையும், தொந்தரவும் அடைந்து, உறுதியின்றி பதற்றமுடன் இருப்பவரை இது குறிக்கிறது. நம்முடைய கர்த்தரின் வருகையையும், நாம் அவரிடத்திலேசேர்க்கப்படுவதையுங் குறித்து எளிதில்அசைக்கப்படுவதையும்பதற்றமடைவதையும் தவிர்க்கும்படிக்குபவுல்விசுவாசிகளைத்தைரிப்படுத்துகிறார்.

கர்த்தருடைய நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (2 தெசலோனிக்கேயர் 2:1-12)

இ. வசனம் 2 "ஒரு ஆசியினாலாவது, வார்த்தை யினாலாவது, ஒரு நிருபத்தினாலாவது கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால்.." ஆதிச் சபையினரிடையே தமது சபைக்காகக் கர்த்தர் வருவதைப் பற்றிய வதந்திகளும், தவறான செய்திகளும் பரவியிருந்தன. "கர்த்தருடைய நாள் ஏற்கெனவே வந்துவிட்டது. ஆதலால், நம்முடைய துன்பமும், உபத்திரவமும் விருதாவாயின" என்றும் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஈ. அநேகம் தீர்க்கதரிசனங்களும், அறிக்கைகளும், நிருபங்களும் அப்போஸ்தலனாகிய பவுலிடம் ஒப்படைக்கப் பட்டன. இன்றைய சபையிலும் ஏராளமான கள்ளத் தீர்க்கதரிசனங்களும், அறிக்கைகளும் மலிந்து காணப்படுகின்றன. ஆரம்பம் முதல் காரியங்களில் எந்தவித மாறுதலுமில்லை. ஒரேயொரு வித்தியாசம் என்னவெனில், இந்நாட்களில் பண ஆதாயத்திற்காக, கர்த்தருடைய நாளை முன்னறிவித்து, தவறான அறிக்கைகளைப் பரப்புகின்றனர். "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதுகிறார். இஃது இக்காலத்திலும் நமக்கு நல்லதோர் எச்சரிப்பாகும்!

உ. தமது சபைக்காக ஆகாயத்தில் வரும் கர்த்தரைப் பற்றி, இக்காலத்தில் சபையில் சஞ்சலப்பட்டுக் கலங்குகிறவர்கள்

1. சபை விட்டு சபைக்கும்

2. கருத்தரங்கிலிருந்து, மறுகருத்தரங்குக்கும்,

3. தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சியிலிருந்து, தொலைக்காட்சி, வானொலி மறுநிகழ்ச்சிக்கும் போகின்றனர். இவர்கள் ஏதாகிலும் சில விசேஷித்த ஆழ்ந்த அறிவு அல்லதுவெளிப்படுத்தலைத்தேடிக்கொண்டிருக்கின்றனர்.

ஊ. குறிப்பிட்ட நாளில் அல்லது குறிப்பிட்ட நேரத்தில்தாங்கள்கர்த்தரால்எடுத்துக்கொள்ளப்படும் படி தங்களுடைய வேலைகளை உதறிவிட்டு, வீட்டுக் கூரையின் மேற்புறத்தில் சிலர் முகாமிட்டிருந்ததும் உண்டு. இத்தகையப் போராட்டம் அவர்களுடைய மனதில் அலைக்கழிப்பையும், ஆவியில் கலக்கத்தையுமே ஏற்படுத்திற்று. பலவிதக் காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலையும் நங்கூரமற்றக் கப்பலைப் போன்று இவர்கள் மாறியுள்ளனர். (எபேசியர் 4:14) அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை எச்சரித்த அதேகாரியம் அவர்களுக்கும் சம்பவித்திருக்கிறது.

2.கேட்டின்மகனாகியபாவமனுஷன்வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது (2:3).

அ. "அந்த நாள்" (கர்த்தருடைய நாள்). இது பழைய, புதிய ஏற்பாடுகளில் பயன்படுத்தப்படும் மேசியாவைப் பற்றிய பதம் ஆகும். (ஆமோஸ் 5:18; ஏசாயா 2:12; மல்கியா 3:2; மத்தேயு 24:43; லூக்கா 12:39). பொதுவாக, "கர்த்தருடைய நாளை" விவரிக்கும் வேறுசில பதங்களும் உள்ளன:

1. தமது சபைக்காக ஆகாயத்தில் கர்த்தர் வெளிப்படும் நாள்.

2. சபை எடுத்துக் கொள்ளப்படுதல்

3. பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல்.

ஆ. கர்த்தருடைய நாள் இன்னமும் வரவில்லை என்பதைக் காண்பிக்கும் பொருட்டு, "கர்த்தருடைய நாளோடு" சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட சம்பவங்களைப் பவுல் இங்கு வெளிப்படுத்துகிறார். இவைகள் சம்பவிக்கும் வரை அந்த நாள் வராது:

கர்த்தருடைய நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (2 தெசலோனிக்கேயர் 2:1-12)

1. "விசுவாச துரோகம் நேரிட வேண்டும்

2. அக்கிரமக்காரன் வெளிப்பட வேண்டும்.

3. தடை செய்கிறவர் நடுவிலிருந்து நீக்கப்பட வேண்டும்". *(வசனம் 3,7)*

இ. "விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு" "துரோகம்" என்பதின் அர்த்தம் மறுதலிப்பு (கிறிஸ்துவோடுள்ள இணக்கத்தை மனதாரக் கைவிடுதல்), விலகுதல், விழுகை, அல்லது கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைக் கைவிடுதல் என்பனவாகும். விசுவாசத் துரோகம் பெரும் விழுகைக்கும்; விசுவாசத்தையும் சுவிசேஷ சத்தியத்தையும் புறக்கணிப்பதற்கும் வழிகோலும். இவை சம்பவிக்க ஆரம்பிக்கும் பொழுது, ஆகாயத்தில் கிறிஸ்து வெளிப்படுவதையும், சபை எடுக்கப்படுவதையும் நாம் எதிர்நோக்கலாம்.

ஈ. இயேசுவானவர், அப்போஸ்தலர் ஆகியோரின் மூல உபதேசங்கள் சபையில் கைவிடப்பட்டு, மறைக்கப்பட்டுப்போகும். உலக ஆசைகள், இலக்குகள், தனிநபரின் வல்லமை, திறமை, சுயவிருப்பம், சுயமுக்கியத்துவம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட தவறான உபதேசங்கள் பிரபலமடையும். இவற்றைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை எச்சரிக்கிறார்.

1. "ஆகிலும்,ஆவியானவர் ளெிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு வழுகிப்போவார்கள்" *(1தீமோத்தேயு 4:1)*.

2. "மேலும், கடைசி நாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிற வர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும்பரிசுத்தமில்லாதவர்களாயும்,சுபாவஅன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும்,அவதூறுசெய்கிறவர்களாயும்,இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும்,நல்லோரைப்பகைக்கிறவர்களாயும்,துரோகிகளாயும்,துணிகரமுள்ளவர்களாயும்,இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும்இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு" *(2தீமோத்தேயு 3:1-5)*.

3. "ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர் களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும்" *(2தீமோத்தேயு 4:3,4)*.

உ. இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை மறுதலிக் கிறவர்கள், தமது சபைக்காக கிறிஸ்து வருவதைக் குறித்து நகைத்துப் பரிகசிப்பார்கள். அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்விதம் முன்னுரைக்கிறார்: "முதலாவது நீங்கள் அறிய வேண்டியது என்னவெனில்: கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுயஇச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?... என்று சொல்லுவார்கள்" *(2பேதுரு 3:3,4)*.

ஊ. இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை மறுதலிக் கிறவர்கள் அதற்குரிய விளைவை அனுபவிப்பார்கள்.

கர்த்தருடைய நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (2 தெசலோனிக்கேயர் 2:1-12)

பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து நீதியுள்ள ஆக்கினை செலுத்தப்படும் பொழுது அவர்கள் அதற்குத் தப்ப முடியாது: "அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" *(2தெசலோனிக்கேயர் 1:8).*

எ. அமெரிக்காவிலுள்ள சபைகளின் எச்சரிக்கை மண்டலத்திலிருந்து அபாயச் சங்கு ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. மக்கள் கூட்டத்தின் மத்தியில் எண்ணிக்கை, பணம், வெற்றி, மேன்மை ஆகியவற்றுக்காக எண்ணிறந்த விசுவாசிகளும், சபை நிருவாகிகளும் எதைவேண்டுமானாலும்செய்யத்துணிகரங்கொண்டுள்ளனர். இவர்கள் விசுவாசத் துரோகமெனும் அபாயத்தில் உள்ளனர். இப்படிப்பட்டவர்கள்:

1. தேவபக்தியின் வேஷத்தைத் தரித்திருக்கிறார்கள், ஆனால், பாவத்திலிருந்து விடுவித்து, மனுஷீக ஆவியை மறுரூபமாக்கி, கிறிஸ்துவுக்கு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கும் மனுஷர் எல்லார் மேலும் வரவிருக்கும் மரணபயத்தை (தேவனிடமிருந்து பிரிக்கப்படுவதை) அகற்றக்கூடிய தேவவல்லமையை மறுதலிக்கின்றனர்.

2.சொந்தசாதனை,சுய-விருப்பு,ய-முக்கியத்துவம்போன்றவற்றால்பீடிக்கப்பட்டுள்ளனர்.

3. உலக ஆசைகள், இலக்குகள் ஆகியவற்றைத் தங்களுடையதாக அங்கீகரித்துள்ளனர்.

4. சுயபெலத்தினால் கிறிஸ்துவோடு (தேவராஜ்ஜியத்தில்) ஆளக்கூடிய தகுதி எங்களுக்கு உண்டு என எண்ணும் அளவுக்கு இறுமாந்திருக்கின்றனர்.

எ. பல்வேறு காரணங்களினால் சபையில் விசுவாசத் துரோகமும், விழுகையும் சம்பவிக்கின்றன. இருப்பினும், பவுல் எச்சரித்துக் கொண்டிருக்கும் பெருமளவிலான, இதுவரை சம்பவித்திராத விழுகை உலகளாவியதாக இருக்கும். அது இனிமேல் வெளிப்படும்! கிறிஸ்துவில்உண்மையாக நிலைத்திருப்பவர்களுக்கு மாத்திரமே இவற்றைஉணர்ந்து கொள்ளும்படியான ஆவிக்குரிய விவேகம் இருக்கும்!

3."கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது" (2:3கடை-5).

அ. வசனம் 3 "பாவமனுஷன்" யோவானின் முதல் நிருபத்தில் கூறப்பட்டுள்ள அந்திக்கிறிஸ்துதான் பாவமனுஷன் *(1யோவான் 2:18,22; 4:3).* வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டுள்ள "மிருகம்" இவனே *(13:18; 16:2; 19:20).* இவன்,

1. ஜாதிகளின் தலைவனும், கள்ளத்தீர்க்கதரிசியும், ஏழுவருட உபத்திரவ காலத்தில் தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கும் மார்க்க அமைப்பாகவும் இருப்பான்.

2. உபத்திரவ காலத்தில் காக்கப்பட்ட யூதர்களையும் புறஜாதிகளையும் அழிக்க எத்தனிப்பான்.

3. உபத்திரவ காலத்தில் பறைசாற்றப்படும் சுவிசேஷசத்தியத்தை எதிர்க்கிறவனாக இருப்பான்.

ஆ. மகா உபத்திர காலத்தில் எருசலேம் தேவாலயத்தில் இவனுடைய சொரூபம் வைக்கப்படும். இது "பாழாக்கும் அருவருப்பு" என்று தானியேல் தீர்க்கதரிசியினாலும் *(9:25-27; 11:31),* இயேசுகிறிஸ்துவினாலும் அழைக்கப்பட்டது

கர்த்தருடைய நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (2 தெசலோனிக்கேயர் 2:1-12)

இச்சொரூபத்தை அப்போஸ்தலனாகிய யோவான் தரிசனத்தில் கண்டான் (*வெளிப்படுத்தின விசேஷம் 13:14*). இவன் தன்னை உயர்த்துகிறவனாயும், தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான். சர்வவல்லமையுள்ள தேவனுக்கு விரோதமாக, கேட்கப்படாத காரியங்களைப் பேசி, தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில் நின்று, தன்னைத்தான் தேவனென்று பறைசாற்றுவான்.

இ. வசனம் 3 "வெளிப்படுவான்" வெளிப்படுதல் என்பதற்கு மறைவை நீக்குதல், திறந்து காட்டுதல் என்பன அர்த்தமாகும். தமது சபைக்காக ஆகாயத்தில் கர்த்தராகிய இயேசு வெளிப்படும் வரைக்கும் "பாவமனுஷனின்" அடையாளம் மறைக்கப்பட்டதாயிருக்கும். நமது காலத்தில் தமது சபைக்காக கிறிஸ்து வருகிறதாக இருந்தால், இப்பொழுது இந்த மனுஷன் உயிரோடிருப்பான் அன்றோ!

ஈ. இவனுடைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி, வழிநடத்தும் சாத்தானின் செயலின் மூலமும் இவன் வெளிப்படுவான். இவன் சகல வல்லமையோடும், அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்கெட்டுப்போகிறவர்களை வஞ்சித்துதன்வசப்படுத்துவான் (*2தெசலோனிக்கேயர் 2:9,10*).

உ. வசனம் 3 "கேட்டின் மகன்" இவன் அழிவுக்குரியவனாக இருக்கிறான். "கேடு" என்பதின் அர்த்தம், ஆவிக்குரிய நித்திய இழப்பு, ஆக்கினை, அழிவு, நிர்மூலம் என்பதாகும். யூதாஸ்காரியோத்தின் இறுதி முடிவு பற்றி கூறும் யோவான் "கேட்டின் மகன்" என்னும் பதத்தையே பயன்படுத்தியிருக்கிறார் (*யோவான் 17:12*).

இவன் பிடிக்கப்பட்டு கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்படும்பொழுது "கேட்டின் மகனாகிய" இவன் நித்திய ஆக்கினைத் தீர்ப்படைவான் (*வெளிப்படுத்தின விசேஷம் 19:20*).

4. அக்கிரமத்தின் இரகசிய வல்லமையைத் தடைசெய்கிறவர் நடுவிலிருந்து நீக்கப்படு முன்னே கர்த்தருடைய நாள் வெளிப்படாது (2:6-8).

அ. வசனம் 6 "இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே". இங்கே "இன்னதென்று" என்றிருப்பது, "யாரென்று" என்றிருக்க வேண்டும். இவர் பரிசுத்த ஆவியானவரே. "ஆனாலும் தடைசெய்கிறவர் நடுவிலிருந்து நீக்கப்படு முன்னே அது வெளிப்படாது" (*வசனம் 7*) எனப் பவுல் கூறி இதை உறுதிப்படுத்துகிறார். "அக்கிரமக்காரன்" வெளிப்படுவதைத் தடுத்து நிறுத்துபவர் ஒருவர் உண்டு. அவரே பரிசுத்த ஆவியானவராகிய கர்த்தர்.

ஆ. மத்திய ஆகாயத்தில் கிறிஸ்து வெளிப்படுகையில் சபை எடுத்துக்கொள்ளப்படும் பொழுது, பரிசுத்த ஆவியானவர் நீக்கப்பட்டு, "அக்கிரமக்காரன்" தோன்றுவான். தடுத்து நிறுத்தும் இருபெரும் வல்லமைகளானப் பரிசுத்த ஆவியானவரும், அவர் வாசம் பண்ணும் சபையும் நடுவிலிருந்து நீக்கப்படும்பொழுது, அக்கிரமக்காரன் வெளிப்பட வழியுண்டாகிறது (*எபேசியர் 2:21,22; 1 கொரிந்தியர் 3:16,17*).

இ. மனுக்குலத்தின் வரலாறு கர்த்தரின் கட்டுப்பாட்டின் கீழுள்ளது என்பதை அப்போஸ்தலன் தெளிவுபடுத்துகிறார். பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களும், சமயங்களும் நிறைவேறும் வரை "அக்கிரமக்காரனின்" வருகை சம்பவியாது (*1தெசலோனிக்கேயர் 5:1; அப்போஸ்தலர் 1:7; மத்தேயு 24:36*)!

கர்த்தருடைய நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (2 தெசலோனிக்கேயர் 2:1-12)

ஈ. வசனம் 7 "அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது" அக்கிரமத்தின் வல்லமை என்பது சாத்தானின் வல்லமையும், இப்பிரபஞ்சத்திலும் வானமண்டலங்களிலுமுள்ள பொல்லாத ஆவிகளின் வல்லமையும் ஆகும் (எபேசியர் 6:12). இது நமக்கு ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தீய வல்லமைக்கு விரோதமாக நாம் ஒவ்வொரு நாளும் போராடுகிறோம். இருப்பினும், அக்கிரமத்தின் வல்லமை இன்னமும் ஓர் இரகசியமும், மர்மமுமாகவே இருக்கிறது. காரணமென்னவெனில், அக்கிரமக்காரன் இன்னும் வெளிப்படவில்லை.

உ. வசனம் 8 "அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்" ஏசாயா தீர்க்கதரிசி இவ்விதம் கூறுகிறார்: அவர், "பூமியைத் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்" (ஏசாயா 11:4).

ஊ. இது ஏழு வருட உபத்திரவத்தின் இறுதிச் சம்பவமாகும். "சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகா நாள்" (வெளிப்படுத்தின விசேஷம்16:14), "அர்மகெதோன் யுத்தம்" (வெளிப்படுத்தின விசேஷம் 16:16), "மகா தேவன் கொடுக்கும் விருந்து" (வெளிப்படுத்தின விசேஷம் 19:18) என இது அறியப்படுகிறது. தமது பரிசுத்தவான்களுடன் கிறிஸ்து பூமிக்குத் திரும்பவந்து, அவபக்தியுள்ள ஜாதிகளையும் அவர்களுடைய சேனையையும் அழித்து, சாத்தானைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, எருசலேமில் தமது பரிசுத்தவான்களோடு ஆயிரம் வருஷ அரசாட்சியை ஆரம்பிப்பார்.

சபை எடுத்துக்கொள்ளப்படுவதைப் பற்றிய பவுலின் போதனையின் மகிமையானதோர் முடிவு இது! சுவிசேஷத்தினிமித்தமாகத் துன்பத்தையும் உபத்திர வத்தையும் சகிப்பவர்களைத் தைரியப்படுத்தும் மகிமையின் வார்த்தையன்றோ இது!!

முடிவுரை

அ. கர்த்தருடைய நாள் (சபை எடுத்துக்கொள்ளப்படுவது) பற்றி நாம் சற்று கூடுதலாக அறிந்திருக்கிறோம். நாம் விளங்கிக் கொண்டவை:

1. இதைப்பற்றிய தவறான செய்திகளைக் கேள்விப்படும் பொழுது நாம் சஞ்சலப்படவும், கலங்கவும் கூடாது.

2. விசுவாச துரோகம் முந்தி நேரிடும்வரை அந்த நாள் வராது.

3. "பாவமனுஷன்" வெளிப்பட்டாலொழிய அந்தநாள் வராது.

4. அக்கிரமத்தின் இரகசிய வல்லமையைத் தடை செய்கிறவர் நடுவிலிருந்து நீக்கப்படும்வரை இவை சம்பவிக்காது.

ஆ. இந்நாளில் நான் இரண்டு காரியங்கள் பற்றி கரிசனையுடையவனாயிருக்கிறேன்:

1. கர்த்தருடைய நாள் (சபை எடுத்துக்கொள்ளப்படுதல்) பற்றி கூடுதலாக அறிந்திருக்கிற விசுவாசிகள்: இவர்கள் சஞ்சலப்படவும், கலங்கவும் மாட்டார்கள்.

2. கிறிஸ்துவை அறியாதவர்கள்: எவரேனும் கோபாக்கினைக்கு உட்படவோ, என்றென்றுமாக அவரிடமிருந்து பிரிக்கப்படுவதற்கோ தேவன் விரும்பவில்லை. அவர்கள் திகிலும், வியப்பும் அடைவதையும், பாவமனுஷனால் ஆளப்படுவதையோ அல்லது நித்திய தண்டனை அனுபவிப்பதையோ அவர் விரும்பவில்லை.

கர்த்தருடைய நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (2 தெசலோனிக்கேயர் 2:1-12)

இ. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? தேவன் உங்களோடு பேசினாரா? இந்தத் தூது பிரசங்கிக்கப்படும் பொழுது அவர் உங்களை இரட்சிப்புக்கென்று அழைத்தாரா?

மாற்று முடிவுரை

அ. 1988-ஆம் ஆண்டில் ஒருவர் எழுதிய புத்தகத் தலைப்பு: "1988-இல் கிறிஸ்து வருவதற்கான 88 காரணங்கள்". அவர் 1990-இல் எழுதிய புத்தகத் தலைப்பு: "1990-இல் கிறிஸ்து வருவதற்கான 90 காரணங்கள்", அவர் 2000 வருடம் எழுதும் புத்தகத்திற்கு, "2000-இல் கிறிஸ்து வருவதற்கான 200 காரணங்கள்" என்ற தலைப்பைக் கொடுப்பார் என நான் ஊகிக்கிறேன்.

ஆ. தமது சபைக்காக கிறிஸ்து வரும்பொழுது இவ்விதம் சம்பவிக்கும் என அவரே இவ்விதம் கூறுகிறார்: "அப்பொழுது இரண்டு பேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான். இரண்டு ஸ்திரீகள் எந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள், ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்" (மத்தேயு 24:40,41). இயேசுவை உங்களுடைய ஆண்டவரும், இரட்சகருமாக இதுகாறும் நீங்கள் அறியாமலிருந்தால் இன்றே அவரிடம் வாருங்கள். இப்பூமியில் நீங்கள் கைவிடப்பட்டு, மகா உபத்திரவத்தை அனுபவிப்பதை அவர் விரும்பவில்லை!